094

**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**
**தொழிலுரிமைத்துவமும், சிறிய வியாபார முகாமைத்துவமும்**
**நிகழ்ச்சித்திட்டம் - மட்டம் 2**
**இறுதிப் பரீட்சை–2018**
**MCC1105 – செயற்பாட்டு முகாமைத்துவம்**

**காலம்: இரண்டு (02) மணித்தியாலங்கள்**

**திகதி: 27.10.2018** **நேரம்: 10.00 மு.ப– 12.00 மதியம்**

***அறிவுறுத்தல்கள்:***

***எவையேனும் நான்கு (04) வினாக்களுக்கு விடையளிக்குக. எல்லா வினாக்களும் சம புள்ளிகளைக் கொண்டுள்ளன.***

**வினா 1.**

a. 'செயற்பாடு முகாமைத்துவம், இலக்குச் சந்தையொன்றின் வரையறுக்கப்பட்ட தேவைகளை பூர்த்தி செய்யும் வெளியீடு ஒன்றை உருவாக்குவதற்கு மூலவளங்களை பயன்படுத்துகின்றது இது எல்லாவகையான தொழில் முயற்சியினதும் மைய தொழிற்பாடுகளில் ஒன்றாகும்'. தொழிலுரிமையாளர் ஒருவருக்கு செயற்பாட்டு முகாமைத்துவத்தின் முக்கியத்துவத்தை உதாரணங்களுடன் விளக்குக.
**(10 புள்ளிகள்)**

b. 'சகல செயற்பாடுகள்/உற்பத்தி முறைமைகளை, உள்ளீடு-மாற்றச் செயற்பாடு-வெளியீடு செயன்முறை என்னும் மாதிரியுருவாகலாம்'

வெதுப்பகம் ஒன்றின் நிலைமாற்ற செயன்முறையை (conversion process) தகுந்த வரைபடத்துடன் விபரிக்குக.
**(15 புள்ளிகள்)**
**(மொத்தம் 25 புள்ளிகள)**

**வினா 2.**

a. நீங்கள் சேதன (Organic) மரக்கறி சில்லறைக் கடையொன்றை ஆரம்பிக்க உத்தேசிருப்பதாகக் கருதுக. அதன் உண்மையான செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் நீங்கள் கருத்திலெடுக்க வேண்டிய சந்தைக் காரணிகள் யாவை என இனம் காண்க. **(10 புள்ளிகள்)**

b. 'செயல் முறை திட்டமிடல், உற்பத்திப் பணிக்குரிய மூலவளங்களின் சிறந்த சேர்க்கைகளைத் தீர்மானிப்பதில் ஈடுபடுகின்றது'.

உற்பத்தி திட்டமிடல் செயல் முறையின் கட்டங்களை விளக்குக. **(15 புள்ளிகள்)**
**(மொத்தம் 25 புள்ளிகள்)**

**வினா 3.**

a. நீங்கள் உங்களின் வீட்டில் 15 தொழிலாளர்களுடன் சிறிய தர ஆடைத் தொழிற்சாலை ஒன்றை ஆரம்பிக்கவுள்ளீர்கள். உங்களின் தொழிற்சாலையின் இட அமைவிடம் (Location) ஒன்றைத் தெரிவு செய்யும் போது கருத்திலெடுக்கப்பட வேண்டிய காரணிகளை இனம் கண்டு விளக்குக. உங்களின் இட அமைவு தீர்மானம் சரியானதா என விளக்குக?
**(15 புள்ளிகள்)**

b. உங்களின் ஆடைத் தொழிற்சாலைக்குரிய பொருத்தமான தள அமைப்புத் திட்டம் (Layout Plan) அநேக அனுகூலங்களைக் கொண்டுள்ளது. ஆராய்க. **(10 புள்ளிகள்)**
**(மொத்தம் 25 புள்ளிகள்)**

**வினா 4**

'20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், பெற்ட்ரிக் ரெயிலர் வேலை அளவிடலில் முதல் முயற்சியை மேற்கொண்டார்'.

a. வேளை அளவிடல் (Work measurement) என்பதன் பொருள் யாது?

**(05 புள்ளிகள்)**

b. உங்களின் வேலைத தளத்தில் வேலை அளவிடலுக்குப் பயன்படுத்தக் கூடிய முறைகளை விளக்குக.

**(10 புள்ளிகள்)**

c. கிரய மதிப்பீடுகள் எதிர்கால திட்டமிடலின் சிறந்த எதிர்வு கூறலாகும். உதாரணங்களுடன் விளக்குக.

**(10 புள்ளிகள்)**

**(மொத்தம் 25 புள்ளிகள்)**

**வினா 5**

a. 'தொடர் உற்பத்தி', 'இடைக்கிடை உற்பத்தி', 'வழக்கமான உற்பத்தி' முறைமைகள் ஆகியவற்றை விளக்குக. இம் முறைமைகளுக்குரிய மிகவும் பொருத்தமான நிலைமைகளை விபரிக்குக.

**(15 புள்ளிகள்)**

b. தொட்டுணரக்கூடிய பொருளை விடவும், சேவையொன்றின் நியமத்தை அளவிடுவது கடினமானதாகும். உதாரணங்களின் ஆதரவுடன் விளக்குக. **(10 புள்ளிகள்)**

**(மொத்தம் 25 புள்ளிகள்)**

*(பதிப்புரிமையுடையது)*